**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 178/2021**

**வா.சா.1 – அப்பாதுரை**

**<u>20–11–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை .</u>**

1. தடப்பாத்தியம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1985ம் ஆண்டு பத்திரப்படி தடப்பாத்திய உரிமை கேட்கிறேன் என்றால் சரிதான். 1985 பத்திரம் யாருக்கு எழுதப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியும். அந்த பத்திரதை அந்த சொத்திற்கு சம்பந்தப்பட்ட அனைவரும் சேர்ந்து 1985ம் ஆண்டு எழுதினார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். முத்துசாமியின் தாயார் சாமாத்தாளை விட்டு விட்டு 1985ம் பத்திரம் எழுதப்பட்டது என்றால் அது தெரியாது. ஓர் பூர்வீக சொத்தை எழுதவேண்டும் என்றால் வாரிசுகள் அனைவரும் சேர்ந்து எழுதினால்தான் அந்த பத்திரம் செல்லும் என்றால் சரிதான். யாரை விட்டுவிட்டு எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது.

2. கோவிந்தசாமி கவுண்டர் மனைவியும், முத்துசாமி கவுண்டர் தாயாருமான சாமாத்தாளை விட்டு விட்டு 1985ம் ஆண்டு பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்றால் ஒரு நபரை விட்டுவிட்டு எழுதிய விபரம் எனக்கு தெரியாது. நான் சொல்லும் தடம் வழி தடம் இல்லை என்றும், அதில் பிரதிவாதிகள் வெள்ளாமை செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா தடத்தை நாங்கள் தான் பயன்படுத்தி வருகிறோம். எங்கள் காட்டை அவர்கள் விலைக்கு கேட்டு நாங்கள் கொடுக்காததால் தடத்தை பயன்படுத்துவதை தடுக்கிறார்கள். மேற்படி விபரத்தை எனது வழக்கிலோ முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். தடம் குறித்து தாலூக்கா அலுவலகத்தில் தனியாக உட்பிரிவு செய்யக்கோரி மனு கொடுத்தேனா என்றால் இல்லை.

3. வருவாய் ஆவணங்களில் விவசாய பூமி என்று உள்ளதால்தான் எனக்கு எதிராகும் என்பாதால் நான் வட்டாச்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் 346/2 ல் தடம் இருப்பதாக சொல்லும் இடத்திற்கான பட்டா பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்றும், அதனை நாங்கள் வா.சா.ஆ.6 தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொத்தில் தடம் இல்லை என்றும் சொத்தில் தடம் இருந்திருந்தால் நான் தனிப்பட்டமுறையில் தடமாக எடுத்தி இருப்பேன் என்றால் சரியல்ல. தடமே இல்லாபோது இருப்பதாக நான் வழக்காடிவருவதால் எனது வழக்கில் அடிப்படை முகாந்தரம் இல்லை என்பதால் வழக்கு தள்ளுபடியாகவேண்டும் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்க்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.11.20 11:14:01 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.